## திராவிட இயக்க இதழ்கள் - ‘கலைப்பூங்கா’





பேரறிஞர் அண்ணாவின் ஒப்புதலோடு, கலைஞரின் வாழ்த்துகளோடு ‘அண்ணா’ என்ற பெயரில் தி.மு.க. ஆதரவு வார ஏட்டைத் தொடங்கி நடத்தியவர் அன்றைய தி.மு.க. எழும்பூர் வட்டக் கிளைக் கழகச் செயலாளரும், மாவட்டப் பிரதி நிதியுமான டி.என்.இராவணன். அதில் கழகச் செய்திகள் மட்டு மல்லாது, சினிமா செய்திகளும் வெளிவந்தன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1953-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய கல்லக்குடிப் போராட்டத்தில் பங்கேற்று, அரியலூர் சிறையில் ஆறு மாதம் சிறைத் தண்டனை காலம் முடிந்து, விடுதலையாகி சென்னை வந்தார். அப்போது அவருக்கு அன்றைய சென்னை நகரத் துணை மேயர் டி.வேணு கோபால் ராவ் நாயுடு தலைமையில் நடைபெற்ற ஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகியவற்றை நடத்தியவர்தான் இந்த இராவணன்.

‘அண்ணா’ இதழில் கிடைத்த தொடர்புகளால் தொடங்கிய இதழ்தான் ‘கலைப்பூங்கா’. தமிழ் சினிமாவின் பல குறிப்பிடத் தகுந்த பேட்டிகள், செய்திகள், நட்சத்திரங்களின் படங்கள் உள்ளிட்டவை, இந்த இதழில்தான் முதன்முதலாக வெளியாகி வாசகர்களின் ரசனைக்குத் தீனி போட்டன.

மாதம் இருமுறை இதழாக 68 ஆண்டுகளாக அந்த இதழ் வெளிவந்தது. கலைஞரின் 85-வது பிறந்தநாளையொட்டி, ‘கலைஞர்-85’ என்ற சிறப்பு மலரை வெளியிட்டது. ‘அண்ணா’ இதழில் பிழைத் திருத்துபவராகவும், ‘கலைப்பூங்கா’ இதழில் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர் பிரபல இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர்.

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.வி.பொன்னையா பாண்டியன்

### முதல்வரும், முதல் துணை மேயரும்!

1969-ஆம் ஆண்டு முதல் கழகப் பணியாற்றி வந்த என்னுடைய தந்தை எஸ்.விஸ்வநாத பாண்டியன், 1996-ஆம் ஆண்டு திருநெல்வேலி, மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டபோது அதன், முதல் துணை மேயராகப் பொறுப்பேற்றார். அதைத் தொடர்ந்து அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. அவர் வகுத்துத் தந்த பாதையில் இன்றைக்கு நானும் கழகப் பணியாற்றி வருகிறேன்.

**– எஸ்.வி.பொன்னையா பாண்டியன், விவசாய அணி அமைப்பாளர், திருநெல்வேலி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சோப்ரா கமிட்டிக்கு எதிர்ப்பு!

1958-ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் பழனியில் நடைபெற்ற மதுரை மாவட்ட தி.மு.கழக மூன்றாவது மாநாட்டின் பொருளாளராக இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் இருந்தார். அந்த மாநாட்டுக்குப் பின், தென் தமிழ்நாட்டில் கழகத்தின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்தது. சித்த மருத்துவ முறையை ஆயுர்வேத மருத்துவத்துடன் இணைக்கப் பரிந்துரை செய்த ‘சோப்ரா’ கமிட்டி அறிக்கைக்கு எதிராக, ஒரு சிறப்பான தீர்மானம் இந்த மாநாட்டில் கொண்டு வரப்பட்டது.

## முதன் முதலில் 20

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**



# திராவிடத் ‘தோழர்’!

“...‘காம்ரேட்’ என்ற சொல், அதிகாரவெறியில் மனிதர்கள் பிரித்துக்கொண்ட நாட்டின் எல்லைகள், மனிதர்கள் அறியாமையாலும் சுயநலத்தாலும் வேறுபடுத்திக்கொண்ட மதமாச்சரியங்கள், மொழிகள், கலாச்சாரங்கள், இன்னும் சொன்னால் இயற்கை பிரித்து வைத்திருக்கிற வெள்ளையர், கருப்பர், சிவப்பர், மஞ்சள் நிறத்தினர், குள்ளர், நெட்டையர், ஆண், பெண் என்ற வேறுபாடுகள், எத்தனை தடைகள், தளைகள், குறுகிய வட்டங்கள் அனைத்தையும் உடைத்துக்கொண்டு மனிதர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அன்போடும், மகிழ்வோடும் செயல்படும் ‘தோழர்கள்’ என்பதை உணர்த்தும் எல்லைகடந்த வலிமையும் வளமும் மிக்கச் சொல்தான் ‘காம்ரேட்’ என்பது...”

இந்த ஆண்டு தனது பொன்விழாவைக் கொண்டாடும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கத்திலிருந்து வந்த எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமியின் ‘தோழர்’ நாவலில் வரும் வரிகள்தான் மேற்கண்டவை.

**வாடியா, சென்னையில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் ‘காம்ரேட்ஸ்’ என்று உரையைத் தொடங்கினார்.**

பொதுவுடைமைச் சிந்தனை இந்த உலகத்துக்குத் தந்த பொக்கிஷங்களுள் ஒன்று, ‘காம்ரேட்’ எனும் சொல். அதன் தமிழ் வடிவமான ‘தோழர்’ எனும் சொல்லை தமிழ்ச் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தியவராக திரு.வி.க. அறியப்படுகிறார். இந்தியாவில் ‘மெட்ராஸ் லேபர் யூனியன்’ எனும் முதல் தொழிற்சங்கத்தை பொம்மன்ஜி பெஸ்டோன்ஜி வாடியா என்பவரோடு இணைந்து தொடங்கியவர் அவர். 1919-இல் மான்செஸ்டர் நகரத் தொழிலாளர்கள் அழைப்பின்பேரில், இங்கிலாந்து சென்று வந்த வாடியா, சென்னையில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் ‘காம்ரேட்ஸ்’ என்று உரையைத் தொடங்கினார். அதை ‘தோழர்களே’ என்று மொழிபெயர்த்தார் திரு.வி.க.

ஆனால், அதற்கும் முன்பே ‘தோழர்’, ‘தோழமை’ என்ற சொற்கள் சங்க இலக்கியத்திலும் கம்பராமாயணத்திலும் காணக் கிடைக்கின்றன. எனினும், முதன் முதலில் இந்தச் சொல்லை பொதுவெளியில், மக்களின் புழங்குமொழியில் புகுத்தி, அதைப் பிரபலப்படுத்தி, பரவலாக்கியவர் தந்தை பெரியார்தான்.

தனது அயல்நாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பிய பெரியார், 13.11.1932 தேதியிட்ட ‘குடிஅரசு’ இதழில் கீழ்க்கண்ட குறிப்பை வெளியிட்டார்:

“இயக்கத் தோழர்களும் இயக்க அபிமானத் தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்வதிலும் பெயருக்கு முன்னால், பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும், ஒரே மாதிரியாக ‘தோழர்’ என்கிற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா-ஸ்ரீ, திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீஜத் என்பன போன்ற வார்த்தைகளைச் சேர்த்துப் பேசவோ எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக் கொள்கிறேன். ‘குடிஅரசி’லும் அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்”.

இவ்வாறு கம்யூனிஸ்ட்டுக் கட்சிக்காரர்களின் உடைமையாக இருந்த ‘தோழர்’ என்ற சொல்லை பொதுவுடைமையாக்கியது, திராவிட இயக்கம்!

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 20

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# கலைஞர் படித்த அரிச்சுவடி!

பனகல் அரசரின் பிறந்த நாளான ஜூலை 9 அன்று நம் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய சமூக வலைத்தளப் பக்கத்தில், 1931-ஆம் ஆண்டு வெளியான புத்தகம் ஒன்றின் அட்டைப்படத்தைப் பகிர்ந்து, வரலாற்றை நினைவுக் கூர்ந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய ‘நெஞ்சுக்கு நீதி’ முதல் பாகத்தில் ‘என்னுடைய அரசியல் அரிச்சுவடி’ என்ற 5-வது அத்தியாயத்தில், இந்த நூலைப் பற்றி “ஐந்தாம் வகுப்பில் ‘பனகல் அரசர்’ என்ற தலைப்புள்ள புத்தகம் துணைப்பாடக் கட்டுரையாக எங்களுக்கு வைக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ ஐம்பது பக்கங்கள் இருக்கும்.


The Rajah of Panagal.
பனகல் அரசர்.
1931

வகுப்பிலேயே நான் ஒருவன்தான் அந்தச் சிறு நூல் முழுவதையும் அப்படியே மனப்பாடம் செய்து சொல்வேன். ‘பனகல் அரசர்’ என்ற அந்தப் புத்தகம்தான் எனக்கு அரசியல் அரிச்சுவடியாகக் கூட அமைந்தது” இப்படிக் குறிப்பிட்டிருப்பார். அப்படியான சிறப்புமிக்க புத்தகம்தான் மணி-திருஞானசம்பந்தர் அவர்களால் எழுதப்பட்டு, சைதாப்பேட்டை ஒற்றுமை ஆபிஸ் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட ‘THE RAJAH OF PANAGAL’ என்ற சிறு நூல்.

**கலைஞர் அவர்கள் இந்நூலை, தன்னுடைய அரசியல் அரிச்சுவடி என்று சொல்லியதற்கான காரணத்தை இந்நூலைப் படிப்பவர்கள் அறிய முடியும்.**

சிறுவர்களுக்கு எழுதப்பட்ட புத்தகம் போல் தெரிந்தாலும், பனகல் அரசர் குறித்த சுவையான பல கருத்துக்களை எளிமையான நடையில் வாசகர்களுக்குக் கடத்துகிறது. 50 பக்கங்களில் 13 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்தப் புத்தகத்தில் பனகல் அரசரின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சம்பவங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

1866-ஆம் ஆண்டு பெரும் செல்வச் செழிப்பு மிகுந்த ஜமீன் குடும்பத்தில் பிறந்தவர் பனகல் அரசர். ஆடம்பரங்களை விரும்பாத அவர் தன்னுடைய வாழ்நாளை விளிம்பு நிலை மக்களுக்காக அர்ப்பணித்தார். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தார். மாநிலக் கல்லூரியில் பனகல் அரசர் மேற்கொண்ட M.A பட்ட ஆய்வும் சமஸ்கிருத மொழியை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது. டி.எம் நாயர், சர் பிட்டி தியாகராயர் ஆகியோருடன் இணைந்து நீதிக் கட்சியைச் சிறப்பாக நடத்தினார். 1917-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற நீதிக் கட்சியின் மாபெரும் மாநாட்டைத் தலைமை தாங்கியவர் பனகல் அரசர்.

6 ஆண்டுகள் மெட்ராஸ் மாகாணத்தின் முதல் மந்திரியாக, பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தார். சட்டங்கள் மூலமும் தன்னிடமிருந்த அதிகாரத்தின் துணைகொண்டும், ‘ஆதி திராவிடர்’ பெயர் மாற்றம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கான அரசாணை, பார்ப்பனரல்லாதாரை பல்வேறு துறைகளின் தலைமைப் பொறுப்புகளில் அமர்த்தியது, இந்துசமய சீர்திருத்தச் சட்டம், உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை, முன்னெடுத்தார். எதிர்ப்புகளை நேரடியாகச் சந்தித்தார், சாமர்த்தியமாகக் கையாண்டார். அரசியல் நுணுக்கங்களையும் அறிந்திருந்தார். இது தொடர்பான பல்வேறு சிறு சிறு அரசியல் நிகழ்வுகளையும் இந்த நூலில் அறியலாம்.

கலைஞர் அவர்கள் இந்நூலை, தன்னுடைய அரசியல் அரிச்சுவடி என்று சொல்லியதற்கான காரணத்தை இந்நூலைப் படிக்கையில் புரிந்துக் கொள்ள முடியும்.வெளியாகி, 90 ஆண்டுகளைக் கடந்துள்ள இந்த சிறு புத்தகத்தை பனகல் அரசர் பிறந்த மாதமான இந்த ஜூலையில், திராவிட இயக்க ஆர்வலர்கள் வாசிப்பது மிகப் பொருத்தமான அரசியல் நிகழ்வாகும்.


...வாசிப்போம்.

**நூலை வாசிக்க:**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

540

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.